THE HINDU

15 OCT 2022

PAGE 6



# Pondicherry University inks MoU with London-based ACCA

**The Hindu Bureau**
PUDUCHERRY

The Department of Commerce, School of Management, Pondicherry University has inked a Memorandum of Understanding (MOU) with Association of Chartered Certified Accountants (ACCA), London, to collaborate on education, training and research.

The MoU, signed on the directions of University Vice-Chancellor Professor Gurmeet Singh, will see the two institutions jointly initiate learning and development (L&D) initiatives by providing learning resources, establishing academic collaboration, collaborative research, and supporting training and development of students, a press note said.




The two institutions will collaborate on education, training and research.

On the occasion, K. Tharanikkarasu, Director of Studies, Pondicherry University, highlighted the need for designing an integrated curriculum with the ACCA academic programme to meet the requirements of the National Education Policy (NEP). This would strengthen the collaboration and would benefit both the institutions. Khush Ahuja, Head of Business Development - India, ACCA, emphasised the need for bringing synergy in the curriculum of both institutions in order to meet the requirements of global employers. He also highlighted the huge gap between the demand and supply of professional accountants in the global scenario and also the changing role of professional accountants in the digitalised environment.

Saravana Kumar, Head of ACCA South India, outlined the advantages of pursuing ACCA in a collaborative mode and the quality enhancement practices in the curriculum.

DINAKARAN

15 OCT 2022

PAGE 13

### லண்டன் கணக்காளர் சங்கத்துடன்

# புதுவை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



▶ புதுவை பல்கலைக்கழக மேலாண்மை பள்ளி வணிகவியல் துறைக்கும், லண்டன் பட்டைய சான்றளிக்கப்பட்ட கணக்காளர் சங்கத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

புதுச்சேரி, அக். 15: புதுவை பல்கலைக்கழக மேலாண்மை பள்ளி வணிகவியல் துறையானது கற்றல் மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் லண்டன் பட்டைய சான்றளிக்கப்பட்ட கணக்காளர் சங்கத்துடன் (ஏசிசிஏ) துணைவேந்தர் குர்மீத் சிங் வழிகாட்டுதலின் படி கையெழுத்திட்டுள்ளது.

புதுவை பல்கலைக்கழக இயக்குநர் தரணிக்கரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டதன் நோக்கம் மற்றும் ஒத்துழைப்பின் குறிப்பிட்ட பகுதிகள் குறித்து விளக்கினார். தேசிய கல்விக் கொள்கையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பட்டைய சான்றளிக்கப்பட்ட கணக்காளர் சங்கத்துடன் கல்வி திட்டத்துடன் ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை வடிவமைப்பதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பதிவாளர் அமரேஷ் சமந்தராய, ஏசிசிஏ சங்கத்தின் இந்தியாவின் வர்த்தக மேம்பாட்டு தலைவர் குஷ் அஹுஜா, தென்னிந்தியா தலைவர் சரவணகுமார் மற்றும் நிதி அதிகாரி, மேலாண்மை பள்ளியின் புல முதன்மையர், ஆராய்ச்சி புல முதன்மையர், நூலகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக சர்வதேச உறவுகள் துறை பேராசிரியர் சுப்ரமணியம் ராஜு வரவேற்றார். வணிகவியல் துறைத்தலைவர் நடராஜன் நன்றி கூறினார்.

DINAMALAR

15 OCT 2022

PAGE 9



# பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு



புதுச்சேரி பல்கலைக் கழகம் சுப்ரமணிய பாரதியார் தமிழியற்புலத்தில் நடந்த முதலியாண்டான் அறக்கட்டளை சொற்பொழிவு நிகழ்ச்சியில் கவிஞர் கோவிந்தராஜ் பேசினார். அருகில் அறக்கட்டளை நிறுவனர் ஆளவந்தார், பேராசிரியர்கள் சந்திரிகா, கருணாநிதி, ரவிக்குமார்.

**புதுச்சேரி, அக். 15–**

புதுச்சேரி பல்கலைக் கழகம் சுப்ரமணிய பாரதியார் தமிழியற்புலத்தில் முதலியாண்டான் அறக்கட்டளை சொற்பொழிவு நடந்தது.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரவிக்குமார் வரவேற்றார். புதுச்சேரி பாரதியியல் ஆய்வாளர் செங்கமலத் தாயார் தலைமை தாங்கி, நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்தைத் திராவிட வேதம் என்பதை விட தமிழ்வேதம் என்றே சொல்லலாம்' என்றார்.

அறக்கட்டளை நிறுவனர் ஆளவந்தார் சித்தன் நோக்கவுரை ஆற்றினார். தமிழியற்புலத்தின் புல முதன்மையர் சந்திரிகா வைணவத்தின் தத்துவங்கள் குறித்தும் வரலாற்று ரீதியாக அதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். பேராசிரியர் கருணாநிதி, கல்வெட்டியல் ஆராய்ச்சியாளர் வில்லியலூர் வேங்கடேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் புதுச்சேரி வழக்கறிஞர் தீந்தமிழ்த் தென்றல் கோவிந்தராசு 'குலசேகர ஆழ்வார் உணர்த்தும் பக்தி நெறி' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

தமிழியற்புலப்பேராசிரியர் ஸ்ரீவித்யா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். பேராசிரியர் தனலட்சுமி நன்றி கூறினார். தமிழியற்புல முனைவர் பட்ட ஆய்வாளர்கள், முதுகலை மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.